*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (2)**
**April 2019**

# கலித்தொகையில் ஏறு தழுவுதல்

**அமுதவல்லி.ந**
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

Corresponding author: amuthavalli@vvvcollege.org

## முன்னுரை

சங்ககாலத் தமிழர்கள் வீரத்தைத் தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்களது விளையாட்டும் கூட வீரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர்கள் காடும் காடு சார்ந்த இடங்களில் வாழக் கூடியவர்களாக இருந்தனர். முல்லை நிலத்தில் காளை அடக்கும் போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிக்கு 'ஏறு தழுவுதல்' என்று பெயர். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டாகும். 'ஏறு தழுவுதல்' என்ற சொல்லானது ஏறு கோள், கொல்லேறு தழுவுதல் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் மஞ்சு விரட்டு, ஜல்லிக்கட்டு என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு தமிழர்களின் பண்பாடு சார்ந்த ஒரு விளையாட்டாகக் கருதப்படுகிறது. இவ்விளையாட்டு ஆயர் இன மக்களின் வாழ்வியலின் மையமாக அமைந்திருந்தது. காளையை அடக்கும் ஒருவனையே ஆயர் குலப் பெண் விரும்பி மணங் செய்து கொண்டாள். ஆயர் இன மக்களும் காளையை அடக்கும் வீரனையே பெரிதும் மதித்தனர். 'ஏறு தழுவுதல்' பற்றிய கருத்துக்களை சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான முல்லைக்கலி விளக்குகிறது. முல்லைக்கலியின் பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் என்னும் புலவர் ஆவார். இவர் பாடியுள்ள பாடல்களில் அமைந்துள்ள ஏறுதழுவுதல் குறித்த கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று**

ஏறுதழுவுதல் என்ற நிகழ்ச்சியானது திருமண வாழ்வை மையமாகக் கொண்டது. ஆயர் இன மக்கள் காளையை அடக்கும் வீரனுக்கே தங்கள் வீட்டுப் பெண்ணை மணம் செய்து கொடுத்தனர். ஆயர் குலப் பெண் ஏறு தழுவுதலை விரும்பாத ஆண் மகனை இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் விரும்ப மாட்டாள் என்ற செய்தியை,

"கொல்லேற்றுக்கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்;
அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்ப்பதற்கரிய வுயிர் துறந்து
நைவாரா ஆய மகள் தோள்" [1]

என்ற பாடல் ஆயர் குலப் பெண்ணின் வீரத்தை எடுத்துரைக்கிறது.

ஆயர்களிலேயே பல வகையான ஆயர்கள் வாழ்ந்தனர் என்ற குறிப்பு முல்லைக்கலியில் காணப்படுகின்றது. அவர்கள் நல்லினத்து ஆயர்[2], கோட்டினத்து ஆயர்[3], கோவினத்து ஆயர்[4], புல்லினத்து ஆயர்[5] என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இவ்வீர விளையாட்டை மேற்கொண்டனர். ஆயர் குடும்பங்களில் பெண் குழந்தைப் பருவம் எய்தியவுடன் காளையையும் வளர்க்க ஆரம்பித்து விடுவார்கள். மணப்பருவம் எய்தியவுடன் 'ஏறு தழுவுதல்' என்ற நிகழ்ச்சி விழாவாக நடைபெற்றது. விழா நடைபெறப் போவதை முதல் நாளே பறையறைந்து ஊரார்க்கும் அறிவித்தனர். இச் செயலை முல்லைக்கலியின் 102வது பாடல் விளக்குகிறது. ஏறினைத் தழுவப் போகும் ஆயர் குலத் தலைவனும் இச்செய்தியைத் தன் சுற்றத்தார்க்குச் சொல்லி அனுப்பினான். இவ்விழா பண்பாட்டுத் திருவிழாவாகவும், மக்களின் சமயம் சார்ந்த திருவிழாவாகவும் கொண்டாடப்பட்டது. கோவலர்களும், குறவர்களும் ஒருங்கிணைந்து ஏறு தழுவுதலை ரசித்தனர் என்ற செய்தியை, மலைபடுகடாமில்

"இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந்தார்ப்ப"[6]

என்ற வரிகள்விளக்குகின்றன.

ஏறு தழுவுதற்கு முதல் நாள் இரவு மைந்தரும், மகளிரும் சேர்ந்து தங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதத்தில் இணைந்து குரவையாடினர். குறிப்பிட்ட நாளில்

ஏறு தழுவுதல் நடைபெற்றது. முல்லை நிலத்து இளைஞர்கள் தலைவியின் காதலைப் பெற, தங்கள் வீரத்தை வெளிப்படுத்தும் விதமாக காளையை அடக்க முயன்றனர்.

**தமிழர் பண்பாட்டின் அடையாளம்**

கலித்தொகையில் முல்லைக்கலியில் உள்ள சில பாடல்கள் ஏறுதழுவுதலைச் சிறப்பித்துக் கூறுகின்றன. முல்லைக்கலியின் முதல் பாடலில் தோழி தலைவிக்கு ஏறு தழுவுதலைச் சுட்டிக் காட்டுகின்றாள். கார் காலத்தில் பூத்த பிடவம், கோடல், காயா மற்றும் சில வகைப் பூக்களைக் கண்ணியாகக் கட்டித் தலையில் அணிந்து கொண்டு காளையை அடக்க வீரர்கள் புகுந்தனர். வீரர்களைத் தாக்கி தம் வலிமையை நிலைநாட்டக் கூடிய காளைகள் சிவபெருமானின் கணிச்சிப் படை போல கொம்பு சீவப்பட்டு தொழுவத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த இடமானது முழக்கமா, இடியா என்னும் படியாக பறைகள் ஆரவாரித்தன. அவ்விடம் வழக்கத்திற்கு மாறாகப் போர்க்களம் போல காணப்பட்டது. காளைகளை வளர்த்த மகளிர் மணக்கின்ற பொடித் துகள்களையும், மணக்கும் புகைகளையும் ஏந்திக் கொண்டு அணி வகுத்து நின்றனர். வீரர்கள் கன்னித் தெய்வம் இருக்கும் நீர்த்துறையையும், சிவன் தவமிருக்கும் ஆலமரத்தையும், திருமாலுக்கு உரிய மரா மரத்தையும் போற்றி வணங்கிய பின்னர் தொழுவத்திற்குள் புகுந்தனர்.

ஏறு தழுவுதல் இடம் பற்றிய செய்தியைப் பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடுகிறது.

> “மல்லல் மன்றத்து மதவிடை கெணடி
> மடிவாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்பச்
> சிலை நவில் எறுழத் தோள் ஓச்சி வலன் வளையூஉப்
> பகல் மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை
> முரண்தலை கழிந்த பின்றை”[7]

என்ற வரிகள் மூலம் பலர் கூடியிருக்கும் மன்றத்தில் காளைகளைத் தூண்டி விட்டு தண்ணுமை முழக்கத்துடன் ஏறு தழுவுதல் நிகழ்ச்சி நடைபெற்றதை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஏறு தழுவுதல் நிகழ்ச்சி**

வீரர்களும் காளைகளும் தங்களது வீரத்தை நிலை நாட்டும் பொருட்டு செயல்பட்டனர். மேலே சுற்றும் நூல்கண்டு நிறத்தில் உடம்பும், சிறிய சிவந்த கண்ணும் கொண்ட காளை ஒன்று தன்னை நோக்கி அஞ்சாமல் பாய்ந்த இடையனைச்

சாகும் அளவுக்குக் குத்தித் தன் கொம்பில் வைத்துக் கொண்டு சுழற்றியது. இச்செயலானது அழகான சீரான நடையழகு பொருந்திய திரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்த துச்சாதனனின் நெஞ்சைப் பிளப்பேன் என்று பகைவர்களுக்கு இடையே வஞ்சினம் கூறியவன் செயல் போல் அமைந்திருந்தது.

**காரிக் காளை**

கதிரவன் தோன்றுவது போன்ற நெற்றிச் சுழி கொண்ட காரிக் காளை விடரிப்பூ அணிந்து கொண்டு வந்த பொதுவனைச் சாய்த்து அவன் குடல் சரியும் படி அவனைக் குலைத்தது. படரும் அந்தி நிறம் கொண்ட சிவபெருமானாகிய பச்சைக் கண் கொண்ட கடவுள் தன்னை இடரிய எருமைக்கடாவின் நெஞ்சைப் பிளந்து தன் கூளிப் பேய்களுக்கு உணவாகத் தருபவன் போல் இச்செயல் காணப்பட்டது. காதோரம் வெள்ளை நிற மின்னலும், பொறி போன்ற வெள்ளை நிறமும் கொண்ட காளை தன் சினத்துக்கு அஞ்சாமல் தன் மீது பாய்ந்த பொதுவனைத் தாக்கி கூர்மையான தன் கொம்பில் அவனைச் சின்னாப் பின்னம் செய்தது. இருள் எனவும் எண்ணாமல், இரவுப் பொழுதில் தன் தடையை மீறித் தன் தந்தையைக் கொன்றவனின் தோளைத் திருகி எறிந்தவன் போல இந்தக் காளை செயல்பட்டது. இவ்வாறு ஏறு தழுவுதல் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. தன் கழுத்தில் மாலை அணிவிக்கக் கூடிய கணவனை மகளிர் தேர்ந்தெடுப்பதற்காக இந்த ஏறு தழுவுதல் நடைபெற்றது.

ஏறு தழுவுதலில் வெற்றி பெற்ற வீரனையே ஆயர் குலப் பெண் விரும்புவாள் என்ற செய்தியும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆயர்குலப் பெண்ணும் தன் மன எண்ணத்தை வெளிப்படுத்துகின்றாள்.

'ஆண் யானையைக் காட்டிலும் அஞ்சாக் கண் கொண்ட இந்தக் காளையை விடாமல் நீ பற்றிச் சென்றால் இந்த ஆய மகள் உனக்கு உரிமையாவாள் என்று கூறுகின்றாள்." மேலும் ஒருத்தி,"பகல் போல் ஒளி வீசும் கண்ணியைத் தன் குழலில் சூடியும், கையில் கோல் வைத்துக் கொண்டும் கொல்லும் காளையைப் போராடி வென்றவனுக்கு என் கூந்தலை மெத்தையாக்கித் தருவேன் என்றும், மற்றொருத்தி, காளையைப் பிடிப்பதில் எனக்கு ஒப்பானவர் யாருமில்லை என்று சொல்லிக் கொண்டு நம் பசுக் கூட்டத்தில் புகுந்து தன் செயல் திறத்தை வெளிப்படுத்தும் பொதுவனுக்கு நான் உறவுக்காரி ஆகாமல் போக மாட்டேன், அவனைக் காண்பதற்கு உதவியாகத் தான் என் காளையுடன் என் கண்ணையும் வளர்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகின்றாள். ஏறு தழுவுதல் என்ற வீர விளையாட்டில் காளைகளும் வருந்தின.

ஆயர்களும் புண்பட்டனர். இருந்தாலும் இவ்வீரவிளையாட்டு காலங்காலமாக நம் தமிழ் மண்ணில் விளையாடப்பட்டு வருகின்றது.

**காதலும், வீரமும் கலந்த ஏறுதழுவுதல்**

தலைவன் பாங்கனிடம்."பலவித மலர்களாலும், அணிகலன்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் திளைத்து விளையாடும் ஆயத்து மகளிருள் என் உயிரில் தன் புகுந்திருக்கும் இவள் யார்?" என்று வினவுகின்றான். அதற்குப் பாங்கன்,'ஓ இவளா?' போரிடும் காளையைக் கைப்பற்றுபவரை அல்லாமல் வேறொருவரைத் திருமணம் செய்ய மாட்டாள் என்று அனைவரும் அறியும்படி தன் திருமகள் போன்ற மாமை நிற உடம்பால் தீண்ட மாட்டாள் என்று எல்லோருக்கும் தெரியும்படி, பறை மீண்டும் மீண்டும் சாற்றப்பட்டு எப்போதும் சொல்லப்பட்டு வளர்ந்து வருபவள் என்று கூறுகின்றான். அதைக் கேட்டவுடன் தலைவன் சுற்றத்தார்க்குச் செய்தியைச் சொல்லி அனுப்புகிறான். அவர்களும் ஏறு தழுவும் விழாவிற்குப் பறை அறைக என்று கூறினர். அவர்களும் அவ்வாறே அறிவித்தனர். திருமணத்திற்காக ஏறு தழுவும் விழா நடைபெற்றது. பார்க்குமிடமெல்லாம் விழாக்கோலத்துடன் மகளிர் கண் பூத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

காளையின் மேல் பாய்ந்து பிடிப்பதற்காகக் காளை மேல் பலர் பாய்ந்தனர். ஆரவாரத்துடன் காளைக்கு எதிர் எதிர் சென்றனர். கொல்லும் வில்லைப் போல வளைந்து காளைகள் சினத்துடன் மேல் எழுந்து ஓடிப் பாய்ந்தன. காளைகளால் மண்ணின் துகள் எழுந்தன. பொதுவர் தம் மார்பினை முன்னிறுத்திப் பாய்ந்தன. காளையின் கொம்புகள் முட்டுவதற்காகக் கவிழ்ந்தன. அது கண்டு பலர் கலங்கினர். அவர்களுள் ஒருவன் மலரும் முகத்துடன் மணிப்பூண் அணிந்த தன் தோள்களால் காளையின் திமிலை வளைத்துப் பிடித்துக் கொண்டு தோன்றினான். காளையை வருத்தினான்; காளையை அடக்கி விட்டான். அதனால் திருமண விழாவுக்கான தண்ணுமை முரசு முழங்கியது. அந்த முழக்கத்துடன் எல்லோரும் சேர்ந்து குரவை ஆடினர். காளையை வளர்த்தவள் அடக்கிய பொதுவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். அவளது தோளையும் அவனையும் அந்தச் சிறுகுடி மக்கள் பாராட்டிப் பேசினர். எங்கும் மகிழ்ச்சி நிறைந்தது.

**முடிவுரை**

தமிழக மக்களின் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாக ஏறு தழுவுதல் கருதப்படுகின்றது. சங்க காலத்தில் முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் இன மக்களின்

மணவினை சார்ந்த செயலாக அமைந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. காதலையும், வீரத்தையும் ஒருங்கிணைக்கும் பாலமாக ஏறு தழுவுதல் அமைந்திருந்தது என்பதை உணர முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. முல்லைக்கலி – 103 வது பாடல் வரி : 63 - 68
2. முல்லைக்கலி : 104 - 4
3. முல்லைக்கலி : 103 – 3
4. முல்லைக்கலி : 103 – 37
5. முல்லைக்கலி : 103 – 48
6. மலைபடுகடாம் : 330 – 333
7. பெரும்பாணாற்றுப்படை : 143 - 147